[8th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நிலங்கள் ஜாதி இந்துக்களிடம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆங்கிலேயன் காலத்திலிருந்தே அந்த நிலங்கள் பஞ்சமர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று இருக்கும்போது எப்படி அந்த நிலங்கள் பஞ்சமர் அல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமையயா : அவர்களும் நிலம் இல்லாத ஏழைகளாக இருப்பார்கள். எந்தப் பகுதியில் பார்த்தாலும் நிலம் ஏராளமாக இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய ஹரிஜனங்களும், பஞ்சமர்களும் கேட்டால் அரசாங்கம் கொடுக்கத் தடை இல்லை.

பத்திரங்கள்

*514 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்டாம்பு வெண்டர்கள் ஒரே நேரத்தில் ரூ. 400 வரை தான் ஒருவருக்கு பத்திரம் விற்பனை செய்யலாம் என்பது உண்மையா ?

(இ) அந்த அளவைக் கூட்டவேண்டும் என்று ஸ்டாம்பு வெண்டர்களிடமிருந்து 1965-66-ம் வருடங்களில் கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

(உ) அந்த அளவை உயர்த்திக் கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Under the existing instructions, a stamp vendor cannot sell to an individual stamps exceeding Rs. 400 in value in respect of a single instrument at a time.

(*b*) No representations have been received by the Government.

(*c*) The question of raising the limit is under the consideration of the Government.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நானூறு ரூபாய் என்ற வரம்பு எப்போது நிர்ணயிக்கப்பட்டது ? அப்போதைக்கப்போது பத்திரத்தின் தொகை அதிகப்பட்டு வந்திருக்கிறது அல்லவா ? அதற்குத் தகுந்தாற்போல் இந்தத் தொகையை ஏற்றிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையயா : இந்தத் தொகை அளவு 1947 அல்லது அதற்குப் பிறகு உயர்த்தப்பட்டது. மேலும் உயர்த்துவது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : ஒரு ரூபாய் மனு லேபிள், 25 பைசா மனு லேபிள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்போது பல மனுக்களுக்கும் இந்தத் தொகை லேபிள்களை ஒட்ட வேண்டியிருக்கிறது. இந்த லேபிள் கிடைக்காமல் மக்கள் 2 ரூபாய், 3 ரூபாய் மனு

லேபிள்களை வாங்கி ஒட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, தேவையான அளவுக்கு அந்த மனு லேபிள்களை விநியோகிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : திரு. மணி அவர்கள் கேட்ட கேள்விக்குத் தனிக் கேள்வி வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் சொன்ன குறை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஸ்டாம்ப் வாங்கி ஒட்ட வேண்டிய நெருக்கடிக்கு பொது மக்கள் ஆளாகிறார்கள். இந்த நிலைமையைப் போக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இந்த நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்யும்போது போதுமான அளவுக்கு ஸ்டாம்புகள், பத்திரங்கள் இல்லாமல் இருந்தது. இந்திய அரசாங்கத்திடம் நம்முடைய தேவையை வற்புறுத்தி எடுத்துச் சொல்லியதன் பேரில் தற்போது போதுமான அளவுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பது என்னிடத்தில் இருக்கக்கூடிய விவரம்.

திரு. செ. மாதவன் : ஸ்டாம்ப் வெண்டர்கள் விற்கும்போது கோர்ட் இருக்கும் இடங்களில் ஒரு நாள்தான் இன்டென்ட் இருக்கிறது. அந்த ஒரு நாள் தவிர அந்த வாரத்தில் வேறு சப்ளை கிடையாது. அதனால் கோர்ட் நடவடிக்கைகளுக்குப் பங்கம் ஏற்படுகிறது. தேவையான அளவு டிரஷரியில் இல்லை. இதிலே காலதாமதம் இல்லாமல் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இதுபோன்ற குறைகள் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : இந்த ஸ்டாம்ப் ஒன்றில்தான் கள்ள மார்க்கெட் இல்லாமல் இருந்தது. நான்கணா ஸ்டாம்ப் ஒரு ரூபாய் கொடுத்தால்தான் கிடைக்கிறது. இந்த நிலையைப் போக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : சில இடங்களில் இதற்குப் பற்றாக் குறை இருந்தது. அதை நிவர்த்தி செய்ய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

*** 515 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெரம்பலூர் வட்டத்திலுள்ள கஜானாவில் சென்ற ஜூலை மாதம் 26-ந் தேதி கோர்ட்டு ஸ்டாம்பும், பத்திரங்களும் கிடைக்காமல் பொது மக்கள் பக்கத்து ஊர்களில் அதிக விலை கொடுத்து வாங்கியது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?